பட்டினமும் சூழலும் பிரதேச சபை - 2023

---

## 1. நிதிக்கூற்றுக்கள் -

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரவு செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மேற் கொள்ளப்பட்ட ரூபா 877,931 தொகை செலவீனம் கொடுக்கப்பட வேண்டிருந்தும். ஆண்டிற்க்கான செலவீனம் மற்றும் நடைமுறைப் பரிப்புக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தங்களால் சுட்டிக் காட்டப்படும் வழுக்கள், தவறுகள் இனிவருங் காலங்களில் இடம்பெறாது | கொடுக்க வேண்டிய தொகைகள் கணக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் வேறு அரச நிறுவனங்களிடமிருந்து ஆயுர்வேத வைத்தியசாலைக்கு நன்கொடையாக கிடைக்க பெற்ற ரூபா 1,000,000 பெறுமதியான மருந்துப் பொருட்கள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | தங்களால் சுட்டிக் காட்டப்படும் வழுக்கள், தவறுகள் இனிவருங் காலங்களில் இடம்பெறாது. | நன்கொடை பெறுமதிகள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கூட்டு மொத்தமான ரூபா 664,909 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட 05 வகையான பொருட்கள் உரிய நிலையான சொத்துக்கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. | தங்களால் சுட்டிக் காட்டப்படும் வழுக்கள், தவறுகள் இனிவருங் காலங்களில் இடம்பெறாது. | நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்கில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 344,074,074 தொகையான 04 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இனிவரும் காலங்களில் நிலையான சொத்து பதிவேடு பொருத்தமான சான்றுகளும் சமர்ப்பிக்கப்படும். | ஆவணங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள் -

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 182 | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாமல் 1990-2013 ஆண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 2,356,250 முற்பணங்கள் 2019 ஆம் நிதிக் கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. | 2024 இறுதி கணக்கறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்கள் தொடர்பாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1), (2),(3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட 75 காலம் கடந்த வைப்புக்கள் ரூபா 16,554,082 தொகை தொடர்பில் சபை உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இனிவருங் காலங்களில் வைப்புக்கள் உரிய காலங்களில் சீர் செய்யப்படும் | வருமானமாக மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 66,570,633 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 35,031,797 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 35,967,000 | 52,318,980 | 23,967,875 | 28,351,105 | 28,516,000 | 27,405,000 | 25,467,000 | 24,750,000 |
| (ii) | வாடகை | 8,007,200 | 8,550,642 | 7,289,032 | 1,261,610 | 7,247,000 | 8,367,000 | 5,443,000 | 4,365,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 8,406,080 | 8,181,985 | 8,181,985 | - | 6,405,000 | 2,171,000 | 2,171,000 | - |
| (iv) | ஏனையவருமானம் | 3,542,500 | 3,346,838 | 1,260,727 | - | 13,019,000 | - | 14,391,000 | - |
| | கூட்டுத் தொகை | 55,922,780 | 72,398,445 | 40,699,619 | 29,612,715 | 55,187,000 | 37,943,000 | 47,472,000 | 29,115,000 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான ஆதனவரி நிலுவை ரூபா 27,030,334 இனை அறவீடு செய்வதற்கு ஒன்று தொடக்கம் எட்டு வருடத்திற்கும் மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவீடு செய்ய நடமாடும் சேவை மற்றும் மு படிவத்தில் நிலுவைத் தொகை குறிப்பிடப்பட்டு வழங்கப்படுகின்றது. | நிலுவைகள் விரைவாக அறவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதி 81 இன் பிரகாரம் உரிய காலப்பகுதிகளில் கணிப்பீடு செய்யப்பட்டு கோரிப் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டணம் அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வெள்ளைமணல் பிரதேசத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 03 விடுதிகளில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வெளிநபர்கள் குடியிருக்கின்றனர் இருப்பினும் சபையினால் அவர்களுக்கெதிராக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. | வாடகை செலுத்தப்படாதவர் களுக்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வாடகை செலுத்தப்படாதவர் களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 16 வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கும் மற்றும் அதன் பெறுமதிகளினை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் மட்டத்தில் அனுமதிக்கப் பட்ட ஆளணியினை விட 11 உத்தியோகத்தர்கள் மேலதிகமாகவும் 28 ஆளணியினர் பற்றாக் குறையாகவும் காணப்படுகின்றனர். | தற்போது சபையில் பதிலீட்டு பணியாளர்கள் அனைவருமே உரிய அமைச்சு அங்கீகாரத்துடனே நியமனம்செய்யப்பட்டுள்ளன. | ஆளணி மாற்றத்தினை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (ஆ) | சபையில் 40 உத்தியோகத்தர்கள் காணப்படுகின்ற போதும் தனிநபர் கோவைகள் (Personal Files) முறையாக இற்றைப்படுத்தப்படாததுடன் வருடாந்த | பதில் வழங்கப்படவில்லை. | வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டு அறிக்கை |

| | | |
|---|---|---|
| செயற்திறன் மதிப்பீட்டு அறிக்கை உத்தியோகத்தர்களிடமிருந்து சேகரிக்கப்படாமல் காணப்படுகின்றது. | | பெற நடவடிக்கை எடுக்கவேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

---------------------------------------------

**4.1 சுற்றாடல் பிரச்சனை**

-----------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **சிபார்சு** |
|---|---|---|
| 1988 ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கு இணங்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் பெறவேண்டிய 10 நிறுவனங்கள் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தப் பட்டிருந்ததும் எதுவித பதில்களும் கிடைக்கவில்லை. இருப்பினும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டும். |